செய்தி வெளியீட்டு எண்:147 நாள்: 21.05.2021

**<u>கொரோனா சிகிச்சை வார்டில் முழு தற்காப்பு கவச உடையணிந்து (PPE Kit) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு</u>**

கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள கொரோனா சிகிச்சை வார்டில் முழு தற்காப்பு கவச உடையணிந்து (PPE Kit) சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., அவர்கள் 20.05.2021 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கொரோனா இரண்டாம் கட்ட பரவலை கட்டுப்படுத்தும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பல்வேறு கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை வார்டு, மருத்துவ கிடங்கு, கண்காணிப்பு கேமரா அறை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கொரோனா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை, மருந்து இருப்பு, ஆக்ஸிஜன் இருப்பு, படுக்கை வசதிகள், கழிவறை வசதிகள், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு ஆகியவை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, கொரோனா தொற்று ஏற்பட்டு சிகிச்சையில் இருப்பவர்களுக்குத் தேவையான அனைத்து மருத்துவ வசதிகளும் கிடைத்திட வழிவகை செய்திடவும், கொரோனா பேரிடர் காலத்தில் அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் அற்பணிப்பு சேவை மனப்பாண்மையுடன் பணியாற்றுமாறு அறிவுறுத்தினார். கள்ளக்குறிச்சி மாவட்ட பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளின்றி வீட்டைவிட்டு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியே வரும் பட்சத்தில் கட்டாயமாக முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியியை பின்பற்றுதல், அடிக்கடி கைகளை சோப்புப் போட்டு நன்கு கழுவுதல் போன்ற தமிழக அரசு அறிவுறுத்திய கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றிட வேண்டும். மேலும், கொரோனா நோய் தொற்று குறித்த தகவல்கள், ஆக்ஸிஜன் படுக்கை வசதி இருப்பு மற்றும் சந்தேகங்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் கொரோனா கட்டுப்பாட்டு மையத்தினை 04151 -228 801, 04151 -220 000 மற்றும் 94999 33834 என்ற தொலைப்பேசி எண் வாயிலாக தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாய்வின்போது, கொரோனா நோய் சிறப்பு மருத்துவர் மரு.பழமலை, மயக்கவியல் நிபுணர் மரு.மகேந்திரவர்மன், கொரோனா சிகிச்சை வார்டு செவிலியர் பூஜா, மற்றும் செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கள்ளக்குறிச்சி.

**<u>செய்தி வெளியீடு:</u>**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.